**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 10.08.2016

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (10.08.2016 முதல் 14.08.2016)

#### 1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். 12.08.16 முதல் 14.08.16 வரை இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 77 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 56 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 19 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நாட்களில் தகுந்த வானிலை எதிர்பார்க்கப்படுவதால், ஆகஸ்ட் 15-ம் தேதிமுதல் இறவை குளிர்கால கம்போடியா பருத்தி விதைப்பிற்கு தேவையானஇடுபொருட்களை தயார் செய்து விதைப்பை துவக்கலாம்.
- ✓ பகல் நேர வெப்பநிலை 32 °C க்கும் அதிகமாக அதிகரிக்க வாய்ப்புள்ளதால், கறவை மாடுகள், உழவு மாடுகள் மற்றும் கோழிகளுக்கு போதுமான தண்ணீர் கொடுக்கவும்
- ✓ வரும் நாட்களில் வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்டுவதால், மல்லிகை பூ மொட்டுகளில் மொட்டு புழு தென்பட வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து, ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி மானோக்ரோடோபாஸ் மருந்தை கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்கவும். மண்ணின் ஈரம் போதுமானதாக இருக்க வேண்டும்.
- ✓ கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சி தாலுக்காவில், மானாவாரி நிலங்களில் விதைக்கப்பட்ட நிலக்கடலை பயிர்களில் மண்ணில் நீர் பற்றாக்குறை தென்பட வாய்ப்புள்ளது. எனவே, புழுதி மூடாக்கு செய்வதன் மூலம், மண்ணின்அடிப்பகுதிகளிலுள்ள நீரை பாதுகாக்க முடியும்.

#### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் வானம் இலேசான மேகமூட்டத்துடனும், வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 36°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 7 கி.மீ முதல் 23 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ குறுவை நெற்பயிரில் தூர்கட்டும் பருவத்தில், 1 ஏக்கருக்கு தழைச்சத்து உரமான 35 கிலோ யூரியாவையும், சாம்பல் சத்து உரமான 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும். உரம் இட்டவுடன் தண்ணீர் வடிக்க கூடாது.மேலும் அதிக காற்றின் வேகம் இருக்கும் போது உரம் தெளிக்க வேண்டாம்.
- ✓ ஆகஸ்ட் 2ம் வாரத்தில் முன்பட்ட சம்பாவிற்கு சி.ஆர்.1009 மற்றும் ஆடுதுறை 50 என்ற இரகங்களை கிடைக்கும் பில்டர்பாயின்ட் தண்ணீர் மூலம் நாற்றுவிட சிபாரிசு செய்யப்படுகிறது.
- ✓ சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ விதை அளவும் மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும். சம்பா நேரடி விதைப்பை மழை எதிர்பார்த்தோ அல்லது காவேரி தண்ணீர் வந்த பிறகு செயல்படுத்தலாம்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் வானம் இலேசான மேகமூட்டத்துடனும், வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 36°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 45 முதல் 70 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 முதல் 18 கி.மீவேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் காற்றின் வேகத்தினால் தோட்டக்கால் பயிரில் நீர்பற்றாக்குறை ஏற்பட்டு பயிர் வாட வாய்ப்புகள் உள்ளது. எனவே தேவையான நீர்ப்பாசனம் செய்யவும்.
- ✓ நிலவும் வானிலையை கருத்தில் கொண்டு முதல் பருவ நெல்லிற்கு 1 ஏக்கருக்கு தழைச்சத்து உரமான 35 கிலோ யூரியாவையும், சாம்பல் சத்து உரமான 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும். உரம் இட்டவுடன் தண்ணீர் வடிக்க கூடாது.மேலும் அதிக காற்றின் வேகம் இருக்கும் போது உரம் தெளிக்க வேண்டாம்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடனும், வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் 23° முதல் 24°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 34°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் 18 முதல் 19°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 27°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 38 முதல் 80 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 9 முதல் 22 கி.மீ வரை வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் இறவை பயிர்களுக்கு மண் ஈரம் பொறுத்து நீர்ப்பாசனம் செய்யவும்.
- ✓ காற்றின் வேகம் 22 கி.மீ அளவுக்கு வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

### 4. மலைப்பிரதேச மண்டலம்

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 18° செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 86 முதல் 90 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 21 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ நடவு செய்யப்பட்ட உருளை கிழங்கு வயல்களில் தகுந்த வடிகால் வசதி செய்து கொள்ளவும்.
- ✓ நிலவும் காற்றின் அதிக ஈரப்பதத்தை கருத்தில் கொண்டு கோஸ் பயிரில் வேர்முடிச்சு நோயை (கென்டை நோய்) தடுக்க, ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனஸ், 10 கிராம் ட்ரைகோடெர்மா மற்றும் 10 கிராம் பெசில்லோமைசிஸ் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து நடலாம்.

### 5. வடமேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடனும், வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 35°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 44 முதல் 73 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 8கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ தற்போது சில இடங்களில் நிலவி வரும் தட்பவெப்ப நிலைகாரணமாக இரு இலை நிலையிலுள்ள மஞ்சள் பயிர்களில் வேர் அழுகல் மற்றும் இலைகருகல் நோய் தாக்கும் வாய்ப்புள்ளது, எனவே மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் சூடோமோனாஸ் மற்றும் டி, விரிடி என்ற எதிர் உயிர் பூஞ்சானக் கொல்லிகளை ஒருலிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் அல்லது புரோப்பிகோனோசூல் என்ற பூஞ்சானக் கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி வீதம்,. வேர் மற்றும் செடிக்கு நன்கு நனையும் படி ஊற்றவும்.
- ✓ நிலவும் வானிலைக்கேற்ப கோழிகளுக்கு வேண்டிய அளவு சுத்தமான நீரை கொடுக்கவும்

### 6. வடகிழக்கு மண்டலம்

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 36°செமுதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 45 மற்றும் 72 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 13 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ விதைக்கபட்ட 30 முதல் 40 வயதுடைய இறவை நிலக்கடலைக்கு ஒரு எக்டருக்கு 400 கிலோ ஜிப்சம் தெளித்து மண் அணைத்து நீர்ப்பாசனம் செய்யவும்
- ✓ செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ காற்றின் வேகம் 22 கி.மீ அளவுக்கு வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை எதிர்பார்க்கப்படவில்லை பகல்நேர வெப்பநிலை 33° செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 25°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 74 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 24 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழை மரங்களுக்கு மூங்கில் கம்புகளால் முட்டு கொடுக்க வேண்டும்.
- ✓ முதல் பருவ நெல்லுக்கு வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு 5 செ.மீ உயரத்திற்கு நீர் பாய்ச்ச வேண்டும்.
- ✓ வரும் நாட்களில் வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்டுவதால், மல்லிகை பூ மொட்டுகளில் மொட்டு புழு தென்பட வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து, ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி மானோக்ரோடோபாஸ் மருந்தை கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்கவும். மண்ணின் ஈரம் போதுமானதாக இருக்க வேண்டும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**
**த.நா.வே.ப.கழகம்,கோவை.ள**